மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, ஜிரேனியம், யூக்காலிப்ட்டஸ், எலுமிச்சை போன்ற செடிகள் வளர்க்கப் படுகின்றன.

சிறு தொழில்களுக்கு மின் கட்டணச் சலுகை

* 732 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களுக்கு உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்துவதில் சலுகை ஏதேனும் காட்டப் படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) & (இ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்சாரக் கட்டண விதித்துறைகளின் கீழ் 5 குதிரைத் திறனுக்கு மேற்படாத மின் அழுத்த அளவு கொண்ட உண்மையான சிறு குடிசைத் தொழில்களுக்கு, யூனிட் ஒன்றுக்கு 12 காசு என்னும் குறைவழுத்த வேளாண்மை மின் கட்டணம் பொருந்தும். சிறப்புச் சூழ்நிலைகளில் தலைமைப் பொறியாளர் (மின்சாரம்) குதிரைத் திறன் பேரளவைத் தளர்த்தலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, 5 குதிரைத் திறனுள்ள சிறு தொழில்களுக்கு 12 பைசா சலுகை அளிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதன் மூலம் ஆண்டுக்கு அரசாங்கத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இப்போது முழு விபரம் இல்லை. சில சிறப்புச் சூழ்நிலைகளின் காரணமாக குதிரைத் திறன் அளவைத் தளர்த்துவதற்கும் தலைமைப்பொறியாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கோவை-திருச்சி அரசு பேருந்துகள்

*714 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை-திருச்சி அரசு பேருந்துகள் திருப்பூர் வழியாக செல்லவேண்டும் என்று அத்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர்